புரட்சி ஏடு

# எம்.ஜி.ஆர்

ஆசிரியர் : தாம்பரம் இளங்கோ

புரட்சி 2 | 4 பக்கங்கள் 15 காசு 19—7—72 | ஏடு 10

# புரட்சி நடிகர் எம். ஜி. ஆருக்கு வெள்ளி செங்கோல் பரிசு

## ஆர். எம். வீரப்பன் வழங்கினர்!



1971-ம் ஆண்டின் இந்தியாவின் சிறந்த நடிகராக, மத்திய அரசால், எம். ஜி. ஆர். தேர்ந்தெடுக்கப் பட்டிருக்கிறது தெரிந்ததே !

அவருக்கு சென்னை சத்யா ஸ்டுடியோ ஊழியர்கள் சார்பில் ஒரு வரவேற்பு கொடுக்கப்பட்டது. இந்த விழாவில் புரட்சி நடிகருக்கு வெள்ளி செங்கோல் பரிசளிக்கப்பட்டது. விழாவிற்கு அகில இந்திய சினிமா வர்த்தக சபைத் தலைவர் ஏ. எல். சீனிவாசன் தலைமை தாங்கினர் அவர் பேசும்போது கூறியதாவது—

"தென்னட்டில் இருந்து முதல் முதலாக சிறந்த படத்துக்கான ஜனதிபதி பரிசு பெற்ற படம், எம். ஜி. ஆர். நடித்த மலைக்கள்ளன்" படம் தான். அதேப்போல இன்று தமிழ் நாட்டு நடிகர் ஒருவருக்கு "பாரத்" பட்டம் கொடுக்கப்பட்டு அதை முதன் முதலில் பெற்ற பெருமை எம். ஜி. ஆருக்குத்தான் கிடைத்து இருக்கிறது.

கடந்த சில ஆண்டுகளாக வட நாட்டு நடிகர்கள், இந்தியாவின் சிறந்த நடிகராக தேர்ந்தெடுக்கப்பட்டு பரிசு வழங்கிய போதெல்லாம் பேசாமல் இருந்த பத்திரிகைகள், எம். ஜி. ஆருக்கு பாரத் பட்டம் கிடைத்திருப்பதை பார்த்து, எதிர்த்து குரல் எழுப்பிக்கொண்டு இருக்கின்றன. ஆகையால் எம். ஜி. ஆர். இன்னும் பல வெற்றிகள் பெற்றிட வாழ்த்துகிறேன்." என்று கூறினர்.

சத்யா ஸ்டுடியோவில் பணிபுரியும் தொழிலாளர்கள் சார்பில் எம். ஜி. ஆருக்கு வெள்ளிச் செங்கோல் பரிசளிக்கப்பட்டது. வெள்ளி செங்கோலை எம். ஜி. ஆரிடம், சத்யா மூவீஸ் அதிபர் ஆர். எம். வீரப்பன் கொடுத்தார். எம். ஜி. ஆருக்கு வாழ்த்துச் சுருள் வாசித்தளிக்கப்பட்டது

எம். ஜி. ஆரை பாராட்டி டைரக்டர்கள் பஞ்சு, நீலகண்டன், நடிகர்கள், எஸ். எஸ். ராஜேந்திரன், டி வி. நாராயணசாமி மற்றும் வக்கீல் வி. பி ராமன். தமிழ் நாடு கல்வித்துறை இயக்குனர். சிட்டிபாபு, என். எஸ். நாராயணப் பிள்ளை ஆகியோர் பேசினர்கள்.

விழாவில் எம். ஜி. ஆருக்கு ஏராளமான பிரமுகர்கள் மாலை அணிவித்து தங்கள் வாழ்த்தை தெரிவித்தார்கள் சத்யா ஸ்டுடியோ தொழிலாளர்கள் சார்பில் ஏராளமான மாலைகள் அணிவிக்கப்பட்டன,

மற்றும் இசை அமைப்பாளர் விஸ்வநாதன், சங்கர் கணேஷ், நடிகர் அசோகன், நடிகை லதா, பட அதிபர் வீரப்பா, எம். ஜி. ஆர். அண்ணன், எம். ஜி. சக்ரபாணி ஆகியோரும் கலந்து கொண்டனர்.

பாராட்டுகளுக்கு நன்றி தெரிவித்து எம். ஜி. ஆர். பேசினர். திரைப்பட வசன கர்த்தா சொர்ணம் நன்றி கூறினர்.

# கணேசனுக்கு ஜால்ரா தட்டும் குன்னக்குடிக்கு எச்சரிக்கை.

சாப்பாட்டுராமன் கணேசனுக்கு குன்னக்குடி வைத்தியநாதன் ஜால்ரா தட்டும் தொழிலை ஒழுங்காக செய்யாமல், புரட்சி நடிகரைப்பற்றி தவருன பிரச்சாரம் செய்கிருனும்.

டேய் குன்னக்குடி ஏ. பி. என் அவர்கள் தயவால், இரண்டு படங்களுக்கு இசையமைத்தவுடன் உனக்கு மண்டைக்கனம் ஏறி விட்டதா? உன்னை புரட்சி நடிகரின் "உலகம் சுற்றும் வாலிபன்" படத்திற்கு இசையமைக்க வாய்ப்பு தரவில்லை என்பதற்காக புரட்சி நடிகரைப்பற்றி தவருன பிரச்சாரம் செய்கிருயாமே.

புரட்சி நடிகருக்கு நடிக்க என்ன தெரியும், "ரிக்ஷாக்காரன்" படத்தில் அப்படி என்ன நடித்து விட்டார். அதற்கு போய் "பாரத்" பட்டம் கொடுத்திருக்கிறர்களே, அண்ணன் கணேசனுக்கல்லவா கொடுத்திருக்க வேண்டும்.

இவரின் நடிப்பெங்கே! அவரின் நடிப்பெங்கே! என்றெல்லாம் ஸ்டுடியோ வட்டாரங்களில் பேசி வருகிருயாமே !

சாப்பாட்டுராமன் நடிக்கும் "ராஜ ராஜ சோழன்" என்ற படத்திற்கு இசையமைக்கிறேம் என்ற மமதையால் இப்படி பேசுகிருயா?

4-ஆம் ப்க்கம் பார்க்க

# நிர்மலா வீட்டில் நிர்வாணச் சிலை!

நிர்மலாவின் பங்களாவிற்குப் போன மனோரமாவிற்கு அதிர்ச்சி ஏற்பட்டது அங்கு நிர்வாண் கோலத்திளிருந்த பெண்ணின் சிலையொன்றை பார்த்ததுதான் அதிர்ச்சிக்கு காரணம். ஆனால், என்ன அழகு என்ன அழகு என்று சிலையை ஒரு நிமிடம்வரை பார்த்து ரசித்த மனோரமாவுக்கு திடீரென்று அதன்மீது வெறுப்பு ஏற்பட்டது 'வீட்டிக்குள்ளே இப்படி அசிங்கமான பொம்மை வச்சிருக்கீங்களே இதை தூக்கி வெளியே வீசி விடுங்க" என்று ஆவேசம் பொங்க கூறுகிறார்.

"இது பொம்பளை சிலையல்ல காதல் தெய்வமான வீனஸ் சிலைதான்" என்கிறார் நிர்மலா!

"சாமியா இப்படி அம்மனமா நிக்குது" எங்க பட்டிக்காட்டு சாமியெல்லாம் சேலை கட்டிக் கிட்டுத்தான் நிற்கும்" என்று பதிலடி கொடுக்கிறார் மனோரமா.

இப்படி ஒரு சுவையான காட்சி நகதா தயாரிக்கும் "அவள்" என்ற படத்திற்காக A. V. M. படப்பிடிப்பு நிலையத்தில் படமாக்கப்பட்டது. A. V. M. ராஜன், சசிகுமார், சந்திரபாபு T K பகவதி, ஆகியோர் நடிக்கும், இவ்வண்ணப் படத்தின் வசனங்களை A. L. நாராயணன் எழுத வாலியின் பாடல்களுக்கு சங்கர் கணேஷ் இசையமைக்க திரைக்கதை டைரக்ஷன் ஆகிய பொறுப்புகளை A. C. திரிலோகசந்தர் ஏற்றிருக்கிறார்.

செப்டம்பர் 15ல் வெளிவர இருக்கும் இப்படம் தமிழ் பட வரலாற்றிலே ஒரு பெரும் புரட்சியை ஏற்படுத்தும் என்று எதிர் பார்க்கலாம்.

# வரதட்சிணை கொடுத்தால்தான் 'முதலிரவு'

வி.கே. ராமசாமி ஒரு பெரிய கஞ்சன். அவருக்குப் பணம் என்றால் உயிர். உலகத்திலே அவருக்கு முதல் தெய்வம் பணம்தான் அவர் தன் இரு மகன்களுக்கு திருமணம் செய்து வைத்தார். முதல் மகன் ராஜகோபாலனுக்கு விஜயமாலாவை திருமணம் செய்துவைத்தார். முதல் சம்பந்தியும் வரதட்சணை கொடுக்காததால், 'முதலிரவு' இல்லை என்று மணமக்களை பிரித்து வைத்தார்.

அதேபோல் தன் இரண்டாவது மகன் நாகேசுக்கு பானுமதியை திருமணம் செய்து வைத்தார்.

மணமகளின் அண்ணன் சிலோனில் இருப்பதால் வந்தவுடன் மொத்தமாக வரதட்சணையை அளிப்பதாக கூறினார் சம்பந்தி. உடனே வி. கே. ராமசாமி தன் இரண்டாவது மணமக்களை பிரித்துவைத்து எப்பொழுது மொத்த பணம் கொடுக்கிறார்களோ அப்போதுதான் முதலிரவு என்றார்.

முதலாவது சம்பந்தி இன்ஸ்டால்மெண்டாக/ மாதவாரி ஒவ்வொரு ஆயிரமாக கொடுப்பதாகக்கூறி கொடுத்தார். முதல் மாதம் ஆயிரம் ரூபாய் கொடுத்தவுடன் மணமகள் தன் கணவனுக்கு ஆறடி தூரத்தில் இருந்தபடி சாப்பாடு மட்டும் கொடுக்கவேண்டும் என்றார் வி. கே. ராமசாமி.

இந்த நகைச்சுவை காட்சி வாஹினி ஸ்டுடியோவில் 'இதோ எந்தன் தெய்வம்' படத்திற்காக படமாக்கப்பட்டது.

இக்காட்சியில் வி கே. ராமசாமி, நாகேஷ் விஜயமாலா, பானுபதி, சி. கே. சரஸ்வதி ஆகியோர் நடித்தார்கள்.

மற்றும் முத்துராமன், கே. ஆர் விஜயா, சுந்தரராஜன், பேபி இந்திரா ஆகியோர் நடிக்கிறார்கள்.

வசனத்தை வியட்நாம் வீடு சுந்தரம் எழுதியுள்ளார்.

கண்ணதாசன் பாடல்களுக்கு விஸ்வநாதன் இசையமைக்கிறார். குறுகிய கால படைப்பாக இப் படத்தை ஆர். வெங்கட்ராமன் கே. ஆறுமுகம் தயாரிக்கிறார்கள்.

டைரக்டர் ஏ சி திருலோகசந்தர் டைரக்ட் செய்து வருகிறார். படப்பிடிப்பு இடைவிடாமல் வாகினியில் நடந்து வருகிறது.

# 'ஜெயா செய்த நாக பூஜை'

புதுமுகம் ஜெயா பக்தி பெருக்கோடு நாகபூஜை செய்தார். "நாக தெய்வமே நாங்கள் நாடும் தெய்வமே, நல்லவர்க்கு நல்லது செய்யும் தெய்வமே!" என்று உள்ளம் உருக பாடினார்.

இப்படியொரு காட்சி காமாட்சி ஏஜன்சின் "அன்னை அபிராமி" படத்திற்காக சத்யா படப்பிடிப்பு நிலையத்தில் படமாக்கப் பட்டன! K. R. விஜயா, சுந்தர்ராஜன், பண்டரிபாய், மனோகர் மற்றும் பலர் நடிக்கும், இதன் கதை வசனத்தை சுப்பு ஆறுமுகம் எழுதுகிறார் G.N. வேலுமணி டைரக்ட் செய்கிறார்.

# 'நான் ஏன் பிறந்தேன்' படத்திற்கு இசை அமைத்ததற்கு காரணமே புரட்சி நடிகர் தான்

(சங்கர்— கணேஷ்)

மக்கள் திலகம் எம். ஜி. ஆர். அவர்கள் நடித்து—காமாட்சி ஏஜென்சீஸ் திரைப்பட நிறுவனத்தார் உருவாக்கியுள்ள "நான் ஏன் பிறந்தேன்" வண்ணப் படத்திற்கு நாங்கள் இசை அமைக்கும் பொறுப்பை ஏற்றதை பெரும் பாக்கியமாகக் கருதுகிறோம். மக்கள் திலகம் அவர்கள் நடித்து—நாங்கள் இசையமைத்துள்ள முதல் படம் இது. இது எங்களுக்குப் பெருமை.

இது குறித்து ஒரு முக்கிய விஷயத்தையும் குறிப்பிட்டாக வேண்டும். நான் ஏன் பிறந்தேன். படத்தின் தயாரிப்பாளரான திரு. வேலுமணி அவர்கள் எனது மாமனார் என்பது பலருக்குத் தெரிந்ததே. முதலில் இந்தப் படத்திற்கு நாங்கள் இசை அமைப்பதாக இல்லை. காரணம்—மாமனார் தயாரிக்கும் படத்திற்கு மாப்பிள்ளை (கணேஷ்) இசையமைக்கிறார் என்று யாராவது எண்ணிக் கொள்வார்களோ என்பதே. அதற்காக வேறொரு இசையமைப்பாளரைக் கொண்டு இசையமைக்க ஏற்பாடு செய்வதாக இருந்தது. ஆனால் புரட்சி நடிகர் அவர்களோ இதைக் கேள்வியுற்றதும் திரு. வேலுமணி அவர்களை அழைத்து இந்தப் படத்திற்கு சங்கரும், கணேசும் தான் இசை அமைக்க வேண்டும். மாமனார்—மாப்பிள்ளை உறவு வேறு, கலை வேறு, கலையில் ஈடுபடும்போது அவர் தயாரிப்பாளர், இவர் ஒரு கலைஞர், இந்த இரு இளைஞர்களுமே (சங்கர் கணேஷ்) சிறப்பாக இசையமைத்துத் திறம்படச் செயலாற்றுகிறார்கள். அதனால் இதற்கு அவர்களே இசையமைக்கச் சொல்லி விட்டார்!" என்று கூறிவிட்டார்.

ஆகவே—இந்தப் படத்திற்கு இசையமைக்கும் பொறுப்பை எங்களுக்கு வழங்கியவர் மக்கள் திலகம் அவர்கள் நடித்து—அதில் இசையமைத்துள்ள காரணத்தால் பெருமையிலும், அந்தஸ்திலும் மேலும் நாங்கள் உயர்ந்து விட்டதாக எண்ணி பூரிப்புறுகிறோம்! மக்கள் திலகம் அவர்கள் நீடுழி வாழ இறைவனை வேண்டுகிறோம்;

---

**அறிவிப்பு**

புரட்சி ஏடு எம். ஜி. ஆர். சம்ந்தமாக தொடர்பு கொள்வோர் கீழ்கண்ட முகவரிக்கே தொடர்பு கொள்ளவும்.

புரட்சி ஏடு எம். ஜி. ஆர்.
17-B. வன்னியர் சந்து,
சென்னை-24.

---

# சித்திராதேவி ஐ. பி. அண்ணாமலை ரகசிய சந்திப்பு

ஒரு நாள் சித்ராதேவியின் வீட்டிற்கு ஐ பி. அண்ணாமலை ஏதோ பழைய ஞாபகம் காரணமாய் வருகிறான்.

ஐ.பி—சித்ரா! கதவைத்திற!

சித்ரா—(உள்ளிருந்தபடியே) யாரது?

ஐ.பி—நான் தான்!

சித்ரா—நான் தான் என்றால் யார் நீங்கள்?

ஐ. பி—கதவைத் திற! அப்பத்தான் புரியும்!

சித்ரா—(கதவை திறந்து பார்த்து) ஆ ..........! நீயா? போடா வெளியே. என் முகத்திலே முழிக்க என்னடா தைரியம் உனக்கு!

ஐ. பி—சித்ரா...! மரியாதையாகப் பேசு! நான் உன் மாஜிக்கணவன்!

சித்ரா—நீயாடா என் கணவன். துரோகி...உன்னை நம்பி வந்த என்னை மோசம் செய்த மோசக்காரன்......!

ஐ. பி—உன்னை வளரவைக்க என்ன பாடு பட்டேன் தெரியுமா...நினைத்துப்பார்!

சித்ரா—என்னை வளர வைக்க பாடுபட வில்லையடா நீ! என் வயிற்றிலே சிசு வளர பாடுபட்ட சண்டாளா...!

ஐ. பி—சித்ரா ஏதோ தெரியாமல் நடந்த நிகழ்ச்சி...... மறந்துவிடு.

சித்ரா—எதுடா தெரியாம நடந்த நிகழ்ச்சி...! பணம், நகையெல்லாம் காலிபண்ணியும் பட அதிபர் என்று பல நபருக்கு என்னை படுக்கையறை பாவையாக்கி காசு சம்பாதித்து என் வயிற்றில் சிசுவை வளர விட்டு பம்பாய்க்கு போனால் இந்தி நட்சத்திரமாகலாம், என்று ஆசை வார்த்தைக் கூறி பம்பாய் சேட்டிடம் என்னை பத்து ஆயிரம் ரூபாய்க்கு விற்று விட்டு சென்னைக்கு ஓடி வந்த சண்டாளா! இது எல்லாம் தெரியாமல் நீ செய்த தவறு .....! கர்ப்பிணி என்றும் பாராமல் நடு வீதியில் அலையவிட்ட நீயா என் கணவன். உன்னுடன் ஒரு நாள் வாழ்ததற்காகத்தான் உன்னைக்காட்டிக் கொடுக்காமல் விட்டேன். இல்லையென்றால், உன் தில்லு முல்லுகளை ஊர் சிரிக்க செய்திருப்பேன்

ஐ. பி—நிறுத்தடி...! பெரிய பத்தினி போல் பேசுகிறாய். உன்னைப்பற்றி எனக்கு தெரியாதா?

சிந்ரா—என்னடா சொன்னாய்!

(என் செருப்பை கழட்ட)

ஐ. பி—(மிரண்டு) வேண்டாம்......! அடித்து விடாதே சித்ரா. ஏற்கனவே நீ கதவை சாத்தி விட்டு அடித்த அடி போதாதா? ஏதோ பழைய நினைப்பில் உன்னிடம் அதிகாரமாய் நடந்து கொண்டேன்

சித்ரா—சரி எதற்காக இங்கே வந்தாய் ?

ஐ. பி—சித்ரா இப்போது நான் யார் தெரியுமா?

சித்ரா—நீ ஒரு புரோக்கர்!

அது தெரிந்ததுதானே!

ஐ. பி—உன் கேலி இருக்கட்டும். நான் அகில இந்திய சாப்பாட்டுராமன் மன்றத் தலைவன் அகில உலக நடிகர் கணேசன் செயலாளர். நான் சொன்னபடி ஆடும் பொம்மை அவர். பார்த்தாயா என் செல்வாக்கை?

சித்ரா—துடப்பத்துக்கு பட்டுக் குஞ்சம் கட்டினது போல, உனக்கு கிடைத்த பதவி. ஆமா உலக நடிகர் என்று சொன்னாயே யார் அது?

ஐ. பி—உலகிலேயே என் அண்ணன் கணேசன் போல் நடிக்க யார் உண்டு. அவரை வைத்து படம் எடுக்க போகிறேன் தெரியுமா?

சித்ரா—உலகத்திலேயே சிறந்த நடிகர்ன்னு நீ சொல்றே! இந்தியாவிலேயே சிறந்த நடிகர் மக்கள் திலகம் என் அண்ணன் எம். ஜி. ஆருககல்லவா பரிசு கிடைத்திருக்கிறது. இந்தியாவிலேயே சிறந்த நடிகராகமுடியல்ல. உலக நடிகராக எப்ப மாறினார் கணேசன் 100க்கு 80 மார்க் வாங்கிய மாணவன் இந்த வகுப்பிலேயே நான் தான் சிறந்த மாணவன் என்று கூறினான் அவனை முட்டாள் என்று நினைப்பது போல உங்க பிறவி நடிகரையும் நினைக்க வேண்டியிருக்கு!

ஐ பி—சரி விஷயத்துக்கு வருவோம்! உனக்கு நல்ல வேடம் என் படத்திலே தர்றேன்! என்ன சொல்றே!

சித்ரா—ஆமா...! ஏதாவது மாநாடு கூட்டி கொள்ளையடிக்க முடியல்லே படம் எடுக்க வந்துட்டீட என்ன ஆச்சு ஒரு ஒரு படத்துக்கும் மாநாடு, ஊர் வலம்ன்னு சொல்லி பணம் வாங்க முடியல்லீயா?

ஐ பி—எல்லோரும் என்னை எதிர்க்க ஆரம்பிசுட்டாங்க. அதிலும் ஸ்டார் பத்திரிகைகாரன் கடுமையா தாக்குறான். அவனை கெடுக்க நான் ஒரு பத்திரிகையை துவக்கினேன். ரசிகர்களுக்கு ஒரு செய்தி அனுப்பினேன். உண்மையான பத்திரிக்கை என்னுது அதனால் ஸ்டார் ஏட்டை வாங்கக்கூடது. என்று அறிக்கை அனுப்பினேன். இதைப்பார்த்த சினிமா மண்டூசி என்னிடம் சரண் அடைஞ்சான். அவனை போனா போகட்டும்ன்னு விட்டுட்டேன்!

சித்ரா—ஆமை புகுந்த வீடும் நீ சேர்ந்த இடமும் ஒன்று. கணேசனை மூலையிலே உட்கார வக்கிர வரைக்கும் நீ சும்மா இருக்கமாட்டே? அட்டை கூட பிடிச்சா விட்டுடும். நீ பிடிச்ச பிடியை விடமாட்டியே!

ஐ. பி—சித்ரா! எனக்கு நேரமாகிறது கிட்டவாயேன். ரொம்ப நாளாச்சு உன்னைத் தொட்டு.

சித்ரா—டேய் தள்ளி உட்காருடா! கிட்டே நெருங்கினே கால்லே இருக்கிறது கைக்

3-ஆம் பக்கம் பார்க்க

2-ஆம் பக்கத் தொடர்ச்சி

கு வந்துடும். கோடம்பாக்கத்துக்குபோடா. மாலா,ஹேமா போன்ற ஏமாந்த பெண்கள் கிடைப்பார்கள். அவர்களை ஏமாற்றி கூட்டிக்கிட்டு போட இனிமே இந்த சித்ரா ஏமாற மாட்டா! ம்......படம் எடுக்க போறேன் என்று எத்தனே பேரை பதம் பாக்கப்போறீயோ!

ஐ பி—ம்......! நான் வரேன் சித்ரா .....!

சித்ரா—வராதே...! போ! இனிமே வந்தா இது தான் கிடைக்கும்.........!

(என்று செருப்பை எடுத்து காட்டுதல்)

---

# நான் இந்தநாட்டின் குடிமகன் பரிசுபெறக் கூடாதா!

## எம். ஜி. ஆர். முழக்கம்

அகில இந்திய சிறந்த நடிகருக்கான பரிசையும், "பாரத்" பட்டத்தையும் பெற்ற எம். ஜி. ஆருக்கு தென் இந்திய சினிமா பத்திரிகையாளர்கள் சார்பில் பாராட்டு விழா நடந்தது. பாராட்டுக்கு பதில் அளித்து எம். ஜி. ஆர். பேசியதாவது :—

பாராட்டுக்கு நன்றி தெரிவித்து புரட்சி நடிகர் பேசியதாவது !

இங்கு பேசிய வீரப்பன் அவர்கள் நான் எதிலுமே அக்கறை யில்லாது ஒதுங்கியிருந்த தால்தான் இவ்வளவு காலம் தாழ்ந்து. இந்த பரிசு கிடைத்தது என்று சூசகமாக குறிப்பிட்டார். இதனை வெகு நாட்களாக என்னிடம் சொல்லவேண்டும் என்று எதிர்பார்த்துக் கொண்டிருந்தது இந்த சந்தர்ப்பத்தில் சொல்லியே ஆகவேண்டும் என்று சொல்லி யிருப்பதாக நான் எண்ணுகிறேன் மேலும் வடநாட்டு பத்திரிகைகள் தந்த தவருன செய்திக்கு பிராயசித்தமாக, இந்த விழா அமைந்து விட்டதாக கூறினர்.

தவறு செய்பவர்கள்தான் பிராயசித்தம் செய்யவேண்டும் என்பது தவறு செய்தவர்கள் அந்த தவறை உணர்ந்து திருந்தவேண்டும் என்பது தான் வடநாட்டிலிருக்கிற ஒரு பத்திரிகை செய்த தவற்றிர்க்காக நாம் எலலாம் பிராயசித்தம் செய்தோம் என்பது பொருத்த மில்லையாயினும், இந்த விழா அந்த பத்திரிகையின் தவற்றை சுட்டிக்காட்டும் முறையில் அமைந்தது உண்மை என்பதை எடுத்துச் சொல்வது அவசியம்.

எனக்கு கிடைத்த பரிசு இந்திய அரசால் நியமிக்கப்பட்ட குழு எடுத்த முடிவின் படி கொடுக்கப்பட்டிருக்கிறது. என்றுமே நான் ஒன்றை எதிர்பார்த்து என்னை நானே ஏமாற்றிக் கொள்வது கிடையாது.

### எனக்கு கிடைத்த பரிசு 1971-க்கு மட்டும்தான்.

எனக்கு அளிக்கப்பட்டுள்ள இந்த பரிசினை 1971 ஆம் ஆண்டு வெளி வந்த எல்லா படங்களையும் பார்த்து அல்ல. போட்டிக்கு சென்ற படங்களைப் பார்த்து இந்த பரிசனை அரசு எனக்கு அளித்திருக்கிறது.

அப்படி தரப்பட்டுள்ள இந்த பரிசினைப் பற்றி மறு அபிப்ராயம் உருவானல் எப்படி தவிர்க்க முடியுமா? இந்த நாடு போற்றி புகழ்ந்த உத்தமர் காந்தியை சுட்டுக் கொள்ள ஒரு கோட்சே இருந்ததுபோல், நம் கருத்துக்கு ஒரு எதிர் கருத்து ஏற்பட ஒரு நல்ல அபிப்ராயத்திற்கு இன்னொரு மாறுபட்ட அபிப்ராயம் ஏற்படாது என்று நம்மை எப்படி ஏமாற்றிக் கொள்ள முடியும்.

ஏனென்றல் கலை என்பதற்கு யாருமே வரையறை நிர்ணயிக்க முடியாது. இதை புரிந்தவர்களுக்கு மணமாச்சரியங்களோ, பெருமையோ ஏற்படாது. ஒன்றை தெளிவு படுத்துகிறேம். இதற்கு முன்பு எத்தனையோ நடிகர்கள் இருந்திருக்கிருர்கள். மறைந்துபோன பலரை பற்றி இன்னமும் பாராட்டுகிருர்கள். ஆனல் அவர்களின் அந்த காலத்திய நடிப்பு இந்த காலத்திலே சிறந்ததாக கருதப்படுமென்று உத்திரவாதம் தர முடியுமா? நேற்றைய சிறந்த நடிப்பு இன்றைக்கு புகழப்படும் என்று எப்படி உத்ரவாதம் கூற முடியும்.

நேற்று நடித்தவர்களின் நடிப்பை இன்று பெருமையுடன் பேசலாமே தவிர இன்றைய சூழ் நிலையிலே அது தான் சிறந்த நடிப்பு என்று ஒப்புக்கொள்ள முடியுமா?

எனவே அவ்வப்போது பார்த்தவர்கள் என்னத்துக்கு ஏற்பத்தான், அதற்கு தீர்ப்பும் உருவாகிறது.

மிகவும் சிறப்பான நடிகர் என்று ஒரு காலத்தில் ஒப்புகொள்ளப்படுகிறவர்கூட இன்னெரு சந்தர்ப்பத்தில் வேறு விதமாக மதிக்கப்படலாம். ஆக இவர்தான் சிறந்த நடிகர் என்று அறுதியிட்டுக் கூற முடியாது.

நான் சிறப்பாக நடிப்பவன் என்பதை வாதத்துக்காக வைத்துக் கொள்வோம் எதிர் காலத்தில் என்னைவிட சிறந்த நடிகன் வரமாட்டான் என்பது என்ன நிச்சயம்.

அதோடு என்னுடைய நடிப்புதான் நடிப்பிற்கே இலக்கணம் என்று சொல்ல எனக்கு என்ன நியாயம் இருக்கிறது.

எனக்கு கிடைத்திருக்கிற இந்த விருதுகூட 1971-ம் ஆண்டிற்காக மட்டுமே அளிக்கப்பட்டிருக்கிறது. நான் தான் தொடர்ந்து சிறந்த நடிகன் என்று யாரும் கருதிவிட வேண்டியதில்லை. அதற்காக எந்த வகையிலும், போட்டியோ பொருமையோ கொள்ள வேண்டியதில்லை.

நாலுபேர் எங்களை ஒப்புக் கொள்ளா விட்டால் நாங்கள் நடிகர்கள் அல்ல. அதுவும் பொருத்தமான சந்தர்ப்பம் இருந்து சரியான வாய்ப்பு ஏற்பட்டு விட்டால் கூட ரசிகர்களாகிய நாலுபேர் மதிக்கவில்லையென்ருல், அவர்கள் சிறந்து விளங்க முடியாது.

ஒருவரை சிறந்த நடிகர் என்று 8 ஆயிரம் அடிகள் வரை படமெடுத்த பின் மக்கள் அவரை விரும்ப மாட்டார்கள் என்பதற்காக அவரை விட்டு வேறு நடிகரை தேடிப்போன தயாரிப்பாளர்கள் உண்டு. கடைசியாக மக்கள் அவரைத்தான் மதிக்கிருர்கள் என்று தெரிந்து அவரையே நடிக்க வைத்தார்கள்.

இதையேன் சொல்லுகிறேன் என்ருல் தயாரிப்பாளர்கள்தான் நடிகர்களை உருவாக்குகிருர்கள் என்ருலும், மக்களால் மதிக்கப்பட்டு உயர்ந்த நிலைக்கு அந்த நடிகன் உயர்த்தப்படும்போது நடிகரை தயாரிப்பாளர்கள் தேடவேண்டியிருக்கிறது. இது மாரியாக வேண்டும்.

இன்று என்னை எல்லோரும் ப்பாட்டி விட்டீர்கள், என்ருலும் என்னை புகைப்படம் எடுக்க உங்களுக்கே என் தயவு இருந்தால்தான் நடக்கிறது.

இப்படி ஒரு நடிகர் பெரிய வருக்கப்பட்ட பிறகுதான் உயர்த்தப் படுகிருன். என்பதை புரிந்து கொள்ளவேண்டும் இதில் எவ்வித போட்டிருக்கும் பொரூமைக்கும் இடமில்லை. கடந்த முப்பது ஆண்டுகளாக நான் சினிமாத் துறையில் வாழ்ந்து கொண்டிருக்கிறேன். என்ருல் கெட்டவர்கள் அதிகமில்லை. வாழ்ந்தவர்கள்தான் அதிகம். அப்படி ஏதாவது ஒரு தவறு நான் செய்திருந்தால் அதைக் கூட நான் என் வாழ்க்கை குறிப்பிலே குறிப்பிட்டு கொண்டுதான் வருகிறேன்.

ஒரு படத்தின் வெற்றிக்கு நடிகர் மட்டும் பொறுப்பல்ல. அனைவரின் ஒத்துழைப்பும் தேவை, தயாரிப்பாளரின் ஒத்துழைப்பு இதில் மிக அவசியம் எங்கள் வீட்டு பின்ளை படப்பிடிப்போது பல நெருக்கடிகள் ஏற்பட்டன. இவைகளை எல்லாம், தயாரிப்பாளர் நாகிரெட்டி அவர்கள் துணிந்து நின்று சமாளித்தார். அதனல் அப் படம் பாராட்டுதலை பெற்றதோடு நானும் "எங்க வீட்டுப்பிள்ளை" என்று அழைக்கப் பட்டேன்.

### ரிக்ஷாக்காரன்

அதே போன்றுதான் ரிக்ஷாக்காரன் படத் தயாரிப்பாளர் வீரப்பன் படம் தயாரித்து வரும் சமயம், அரசியலில் பல சிக்கல்கள். அந்த சமயத்தில் தேர்தல் வேறு வந்து விட்டது அவர் என்னிடம் வந்து உங்கள் சேவை நாட்டுக்கு இப்போது தேவையாக இருக்கிறது. நீங்கள் அதை முதலில் செய்யுங்கள் பிறகு என் படத்தினை முடிக்கலாம் என்ருர்.

### பத்மஸ்ரீயும்-பாரத்தும்

எனக்கு முன்பு தரப்பட்ட பத்மஸ்ரீ விருதினை ஏற்க மறுத்து விட்டேன். அப்போது இருந்த நிலை வேறு அது மொழி உணர்வு அடிப்படையில் மறுக்கப் பட்டது. ஆனல் இந்த "பாரத்" பட்டம் என் தொழிலினை பாராட்டி தரப்பட்டது. தொழிலினை பாராட்டி தரும் இப் பட்டத்தினை ஏற்பதில் என்ன தவறு இருக்கிறது.

கலை உலகினை பாராட்டுவதாகவே இதனை நான் கருதுகிறேன். எனக்கு மட்டும் கிடைத்த பாராட்டாக இது இல்லை. நான் ஜப்பான் சென்றிருந்தபோது ஜப்பானில் ஒரு பெரிய ஸ்டுடியோவை பார்க்கச் சென்றிருந்தேன். அங்கிருந்த பத்து அரங்குகளிலும் படப்பிடிப்பு நடக்கவில்லை. பதினென்ருவது அரங்கில் டெலிவிஷனுக்காக செட் போட்டிருந்தது. மற்ற அரங்குகளில் ஏன் படப்பிடிப்பு நடக்கவில்லையென்றேன். டெலிவிஷன் வந்து விட்டது அதனல் என்ருர்கள்.

தமிழகத்தில் இன்னும் உயர்ந்து வளரவேண்டிய சினிமா உலகத்துக்கு 1975ம் ஆண்டு பெரிய சோதனைக் காலம் வரப்போகிறது. இங்கும் டெலிவிஷன் வந்து விட்டால் திறையுலகம் அதை போட்டி போட்டாக வேண்டும். அமெரிக்கா போன்ற நாடுகளில் 70 எம். எம். சினிமாஸ்கோப் வந்ததற்கு காரணமே, டெலிவிஷனேடு ஏற்பட்ட போட்டிதான்.

சினிமா பத்திரிகையாளர்கள் இவைகளை யெல்லாம், உதாரணங்களுடன் சேகரித்து எழுத வேண்டும்.

### தமிழ் படம்

பரிசளிப்பு விழாவில் கலந்து கொண்ட ஒரிசா முதல் மந்திரி நந்தினி சத்பதி மற்ற மொழி படங்களை யெல்லாம் குறிப்பிட்டு பேசினர். ஆனல் தமிழையும், தெலுங்கு படத்தை பற்றியும் ஒரு வார்த்தைகூட பேசவில்லை. இதை நினைத்து வேதனைப் பட்டேன் தமிழ் நாட்டில் இருந்து சென்றவை படங்கள் இல்லையா? ஏன் அவர்கள் இவைகளையும் குறிப்பிட்டு பேசக் கூடாது.

### மொழிப்பற்று

எனக்கு பரிசளித்த மேற்கு வங்காள முதல் மந்திரி சித்தார்த்த சங்கர் ராய் திறமை மிக்கவர். கெட்டிக்காரர் நிர்வாக திறமையுடையவர். ஆனல் அவருக்கும் மொழிப் பற்று இருப்பதாக அறிந்தேன், அது போன்ற மொழிப் பற்று நம் எல்லோருக்கும் ஏற்படவேண்டும்.

### பட்டம்

தங்க பதக்கம் பெற்ற வங்கப்படம், ஓட்டெடுப்பு மூலம் தேர்ந்தெடுக்கப் பட்டது ஆகும். அதாவது இந்திப் படம் ஒன்றுக்கும், வங்காள படத்திற்கும், சமமான ஓட்டுகள் கிடைத்தன. தேர்வுக் குழு தலைவர் தனது ஓட்டைப் போட்டு வங்காள மொழிப் படத்தை தேர்ந்தெடுத்தார்.

இதைப்பற்றி யாருமே பேசவில்லை. ஆனல் சிறந்த நடிகராக எதிர்ப்பின்றி தேர்ந்தெடுக்கப்பட்ட என்னை பேசுகிருர்கள், எழுதுகிருர்கள், எனக்கு கிடைத்த இந்த பட்டம் வாழ்க்கை, முழுவதற்கும் அல்ல. 71-ம் ஆண்டுக்கு மட்டும்தான். இதனை நினைத்துப் பார்த்தால் இன்னும் பலருக்கு வாய்ப்பு காத்திருக்கிறது.

நான் இந்த நாட்டின் குடிமகன் நான் நடித்த படத்தினை பார்த்துவிட்டு என்னை சிறந்த நடிகன் என்று தேர்ந்தெடுத்திருக்கிருர்கள். இதற்கான விருதினை நான் ஏன் பெறக் கூடாது. அப்படி என்ன தவறு பெரிய கொடுமை புரிந்து விட்டேன். இங்கு நான் ஒரு உண்மையைச் சொல்லுகிறேன். முன்பு கெய்ரோ பட விழா நடந்தபோது நான் தயாரித்த "நாடோடி மன்னன்" படத்தை போட்டிக்கு அனுப்பும்படி சுமார் ஆறு தந்தி டெல்லியிடமிருந்து வந்தது. நான் அந்த படத்தை 12 ஆயிரம் அடிகளுக்குள்ளாக்கி டெல்லிக்கு அனுப்பினேன். ஆனல் திடீரென்று என் படத்தை திருப்பி அனுப்பி விட்டார்கள் "வீரபாண்டிய கட்டபொம்மன்" படத்தை அனுப்பினுர்கள் நாடோடி மன்னன்தான் கெய்ரோ பட விழாவில் கலந்து கொள்ள வேண்டிய சிறந்த படம் அனுப்பிவையுங்கள் என்று கூறியவர்கள், அதை வேண்டாம் என்று திருப்பி அனுப்பிவிட்டு வீரபாண்டிய கட்ட பொம்மனை அனுப்பியது பற்றி எப்போதேனும் ஒரு வார்த்தை பேசியது உண்டா?

இந்த இனிய விழாவிலே ஒரு மகிழ்ச்சியான செய்தியையும் உங்களிடம் அறிவித்துக் கொள்கிறேன். பினங்கு சர்க்காரில் இருந்து இம் மாதம் 19ம் தேதி எனக்கு நடிப்புக்காக பட்டம் தர இருக்கிருர்கள் என்று தந்தி வந்திருக்கிறது. அதை பெற்றுக் கொள்வதற்காக நான் பினங்கு செல்கிறேன்.

எந்த சந்தர்பத்திலும் புகழை தேடி அலைந்ததில்லை. ஏனென்ருல் புகழ் நிலையானது

(4-ஆம் பக்கம் பார்க்க)

3-ஆம் பக்கத் தொடர்ச்சி

அல்ல, ஒரு காலத்தில் தூக்கி வைத்து பாராட்டப் பட்டவா கள் வெளியே தூக்கி எறியப் பட்டிருக்கிருர்கள்.

எனவே புகழ் என்பது வெறும் கானல் நீர்தான் இந்த புகழ் எனக்கு கிடைத் ததைப் பற்றி சிலர் தூற்றிக் கொண்டிருந்த நேரத்தில் இப் போது வந்து பாராட்டி நின் றவர்களில் யாராவது அதை வேண்டாம் என்று தடுத் திருப்பார்களா? வேடிக்கை பார்த்தவர்களும், உண் மையை உணர்ந்தும் வெளியே சொல்லத் துணிவில்லாத நிலையுமாக இருந்தவர்கள் தானே இருந்தார்கள் என் ருலும் நீங்கள் இன்றைக்கு ஜாதி, மதம், மொழி வேறு பாடின்றி என்னை பாராட்டி இருக்கிறீர்கள் என்ருல் அதற்கு காரணம், ஒரு உண் மையை தெளிவாக நீங்கள் உணர்ந்து கொண்டிருக்கிறீர் கள் என்பதுதான்.

ரசிகர் மன்றங்கள் கலைஞர் ஒருவன் பெயரால் அமைக்கப் பட்டிருந்தாலும், அவரது மறைவுக்குப் பிறகு மக்கள் நலனுக்கு பாடுபடுகின்ற வகையில் அமைக்கப்பட வேண்டும். பாத்திரத்தை அறிந்து கொண்டு இயற்கை யாக நடிக்கின்ற நடிப்புக்குத் தான் எதிர் காலத்தில் வர வேற்பு இருக்கும். மிகையான நடிப்புக்கு நிச்சயமாக வர வேற்பு இருக்க முடியாது. சிலரது நடிப்பு மிகைப்பட் டது. ஓவர் என்று சலித்துக் கொள்கிருர்கள்.

மக்களால் பாராட்டு இல்லாவிட்டால் என்னதான் உணர்ச்சி வசமாக நடித் தாலும் அது சோபிக்காத தோடு பயன்படவும் முடி யாது. நல்ல நடிகராக இருந் தாலும் அவர் புகழ் பெற்று விட முடியாது. இந்த பெருமை மிக்க பாராட்டு விழாவுக்கு அறிஞர் அண்ணு இல்லையே என்ற மனக்குறை யோடு தேங்காய் சீனிவாசன் குறிப்பிட்டு அண்ணுவின் சார் பில் தம்பி வாழ்த்துவதாக கூறினுர். அவரின் உணர்வின் அண்ணுவே வாழ்த்தியதாக கருதி உங்களுக்கு ஓர் இதயப் பூர்வமான நல் வாழ்த்து என்று கூறி விடை பெறு கிறேன் அண்ணு நாமம் வாழ்க என்று புரட்சி நடிகர் எம். ஜி. ஆர். கூறினுர்.

## "மறுமொழி"

கழகப் பேச்சாளர் மதுரை கா. வையை நம்பி 'மறு மொழி' எனும் கழகக் கொள்கை பரப்பு மாத ஏட் டினை, மதுரை மாவட்ட தி. மு. க. மாகாடு கூடும் ஆகஸ்டு மாத முதற்கிழமை யில். கழகத் தலைவர்களின் வாழ்த்துக்களோடு வெளியிட ஆவன ஆற்றுகிருர். கழக உடன் பிறப்புக்களைத் தொடர்பு கொள்ளுமாறுக் கோருகிருர்.

மறுமொழி-மாதிகை
(ஆசிரியர்)
மதுரை கா. வையைநம்பி,
80, தெற்குப் பெருமாள்
மேஸ்திரி வீதி,
மதுரை—1.

## ஆபத்தில் உதவிய ஒளி விளக்கு

புரட்சி நடிகர் நடித்த "ஒளி விளக்கு" படத்தில் சவுகார் ஜானகியும் நடித்தார் அல்ல வா! அந்த படத்தின்படப்பிடி ப்பு நடந்து கொண்டிருந்த போது சவுகார் ஜானகிக்கு பாட்டாளிகள் பொருத்தப் பட்ட விலை உயர்ந்த விளக்கு ஒன்றை பரிசாகக்கொடுத்தார் கள்.

அந்த விளக்கை சவுகார் ஜானகி அவருடைய வீட்டில் அலங்கார பொருளாக வைத் துள்ளார்.

சமீபத்தில் ஒரு நாள் இரவு சமையல் அறையில் வேலை செய்து கொண்டிருந்தார் சவு கார் ஜானகி. சோறு அறை குறையாக வெந்து கொண்டி ருந்தது, குழம்பும் ரசமும் தயாராகிக் கொண்டிருந்தது, அப்போது திடீரென்று வீட்டு க்கு தனியாக உள்ள மின்சார இணைப்பில் கோளறு ஏற்பட்டு இருள் சூழ்ந்தது.

அப்போது வீட்டில் மெழுகு வர்த்தியோ, மண்ணெண்ணை விளக்கோ இல்லை. என்ன செ ய்வதென்று திகைத்தார் சவு கார்ஜானகி.

அவருடைய மகள் கிருஷ் ண சச்சுவுக்கு எம். ஜி. ஆர். அளித்த பாட்டாளிகள் பொ ருத்தப்பட்ட விளக்கு நினை வுக்கு வந்தது. ஓடினர் தூக்கி கொண்டு சமையல் அறைக்கு விளக்கு ஏற்றப்பட்டது. சமை யல் அறையில் ஒளிபரவியது, சமையல் முடிந்தது. அந்த விளக்கு ஒளியிலேயே உண வும் டண்டு முடித்தார்கள்.

அன்று முதல் அந்த ஒளி விளக்கை காட்சி பொருளாக அல்ல, எனக்கு கிடைத்த அபூர்வ பொருளாக பாதுகா த்து வருகிறேன் என்று சவு கார் ஜானகி கூறினுர்.

## அமெரிக்காவில் வி. ஜி. சந்தோஷம் தவணை முறை மாநாட்டில் கலந்து கொண்டார்!!

இந்திய தொழில் அதிபர் வி. ஜி. பன்னீர்தாசின் சகோ தரர் வி. ஜி. சந்தோஷம், அமெரிக்க தவணை முறை விற்பனையாளரின் அமைப்பின் பேரில் அமெரிக்கா சென்று சுற்றுப்பயணம் செய்து திருப் பினுர்.

நியூயார்க் நகரில், கடந்த 15-ந் தேதி முதல் 3 நாட்கள் நடைபெற்ற, அமெரிக்க தவணைமுறை, விற்பனையா ளர் மாநாட்டில் அவர் கலந்து கொண்டு பேசினுர். உலகி லேயே பெரிய உள் நாட்டு விற் பனைச் சந்தை இந்தியாவில் தான் உள்ளது என்றும், தவணைமுறை திட்ட விற்பனை மூலம் இந்திய மக்களின் வாங் கும் சக்தி பெருகி உள்ளது என்றும், மாநாட்டில் பேசும் போது அவர் குறிப்பிட்டார்.

நியூயார்க் பட ரேடியோ வுக்கு (டெலிவிஷன்) வி. ஜி. சந்தோஷம் பேட்டி அளித் தார். அமெரிக்காவில் தவணை முறை விற்பனை நிறுவனங்கள் செயல் படும் முறையையும், வீடு கட்டித் தரும் நிறுவனங் களையும் அவர் ஆராய்ந்தார்.



"அவள்" வண்ணப்படத்தில் ஸ்ரீகாந்த், நிர்மலா, சசிகுமார்

## சத்தியசீலன் எம். ஜி. ஆர்.

சத்தியா அன்னை ஈன்ற
சத்திய சீலன் எம். ஜி. ஆர்.
மெத்தப் புகழினை உவந்து சொல்லுவோம்—அன்னர்
மேன்மை வழியினில் யாவரும் செல்லுவோம்!

நாட்டின் நலன்கள் கருதியே
நண்ணும் பேரிடர் மாய்த்து
வாட்டமாய்த் தொண்டுகள் செய்வதில் வல்லோன்—ஏழை
வளமுற வாழந்திட ஈவதில் நல்லோன்!

பொருமை சூழ்ச்சி எதையும்
பொறுத்து வ்ணாை அன்பாய்ப்
பொற்புடன் அணைக்கும் மழலை மனத்தோன்—சிறிதும்
பொல்லாங்கு பிறருக்கு நினையாத குணத்தோன்!

மதுவின் தீமைகளை எடுத்து
மக்கட்கு ஆழ்ந்து உரைத்துத்
தீதுவழி போகவிடாது தடுத்தோன்—மதுத
திட்டம் எதிர்த்துக்குரலினை விடுத்தோன்;

தனியொரு நடிப்பினை நன்ருய்த்
தகைவொடு வகுத்துக் கொண்டு
குன்றில் இட்ட விளக்கென நிற்போன்—நடிப்பில்
குறைகள் சொன்னுல் நயந்து ஏற்போன்!

தணியா ஆர்வத் தோடு
தமிழைப் பேணிக் காத்து
மணியாய்ப் பேசிடும் ஆற்றல் கொண்டோன்—அண்ணு
மலரடி ஒன்றே தெய்வமெனக் கண்டோன்!

இயற்றியவர்
கோ. செயசந்திரன்
78, ஏழுகிணறு தெரு. சென்னை-1.

1-ஆம் பக்கத் தொடர்ச்சி

தடி நடிகனுல் உனக்கு நிறைய சான்ஸ் வரும் என்பதால் அவனை காக்காய் பிடிக்கி ருயா?

சாப்பாட்டுராமன் தயவு வேண்டுமானுல் அவன் காலைப் பிடி அல்லது அவன் வீட்டுக்கு காவடி தூக்கு. அதை விட்டு புரட்சி நடிகரைப்பற்றி பேச உனக்கு என்ன தகுதி இருக் கிறது.

உனக்கு மண்டைக்கனம் ஏறி விட்டது என்பதற்குத் தான் ஏ. பி. என் இயக்கும் "பகவத் கீதை" படத்திற்கு உன்னை விலக்கி விட்டு எஸ். வி. வெங்கட்ராமனை இசை யமைக்க செய்கிருர்.

அத்தோடு "ராஜ ராஜ சோழன்" படத்திலிருந்தும் உனக்கு கல்தா கொடுக்கப் போவதாக நமக்கு ஒரு செய்தி வந்துள்ளது.

உனக்காக பாடுபட்ட நபரையெல்லாம் இப்போது உதாசீனப் படுத்தி அகம் பாவத்துடன் தன்னைவிட சிறந்த இசை யமைப்பாளன் கிடையாது என்ற நினைப்பில் ஒரு பின்னணி பாடகியிடம் தவருக நடந்துகொள்ள முயற்சித்தானும், இது போன்ற உன்னின் அட்ட காச செய்திகள் பல நம்மிடம் வந்துள்ளன. இனிமேலாவது புரட்சி நடிகரை தூற்றும் புத்தியை விட்டுவிடு. இல்லை யென்ருல் உன்னைப் பற்றிய அனைத்துச் செய்திகளும் தொடர்ந்து வெளிவரும்.

விஜிபி யால் உருவாக்கப்பட்ட தவணைத் திட்டம் ஏராளமான மக்களுக்கு உதவுகிறது.




மேலும் மேலும் அதிகமான மக்கள்
விஜிபியின் சுலபத் தவணைத் திட்டத்தால் பயனடைகிருர்கள்

எல்லோரும் சுலபமாகப் பொருள்கள் வாங்கும் வாய்ப்பு. தயாரிப்பாளர்களின் விலைக்கே தரும் தனிச்சிறப்பு. வசதிக்கேற்றபடி பணம் செலுத்தும் முறை. தேர்ந்தெடுத்து வாங்க ஏராளமான பொருள்கள். உத்திரவாதமுள்ள தரமான பொருள்கள். விற்பனைக்குப் பிறகும் திருப்தியளிக்கும் சேவை.

இத்தனைக்கும் மேலாக வாடிக்கையாளர் பெறும் மன நிறைவு.

VGP

வி.ஜி. பன்னீர்தாஸ் & கோ.
சைதாப்பேட்டை, சென்னை-15. போன்: 442333
கிளை: தி.நகர், சென்னை-17. போன்: 440246
புதிய ஷோ-ரூம்:
27. ரத்தன் பஜார், மதராஸ்-3 போன். 33214

இரண்டு லட்சத்துக்கு மேலான மக்களுக்கு சேவை புரியும் தனிச் சிறப்பு.

ஆசிரியர், வெளியிடுபவர்: பி. இளங்கோ, சென்னை-5. நிர்வாக அலுவலகம் 17-B வன்னியர் சந்து சென்னை-24.
அச்சிடுபவர்: நா. நிறைமதி அச்சகம், 74 அபிபுள்ளா சாயபு தெரு. சென்னை - 5.